**<u>தேதி - 13.02.2025</u>**

**<u>அசல் வழக்கு எண்.11/2020</u>**

**<u>வா.சா.1 - திருமதி. மாலா</u>**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுரையில் நானும், எனது கணவரும் S.T.C.No.201/2019, 202/2019 வழக்குகள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அதில் சொல்லப்பட்டுள்ள காசோலைகளுக்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும் எந்த காலகட்டத்தில் பரிவர்த்தனைகள் நடந்தது என்று எனக்கு தெரியும். 2015ம் ஆண்டு மட்டும் தான் பரிவர்த்தனை இருந்தது, அதுமட்டும் தான் முதலும் கடைசியுமான பரிவர்த்தனை ஆகும். எனது கணவருக்கும், பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் ஆகியோருக்கும் கடந்த 07.02.1994ல் ஆவண எண்.175/1994 என்ற அடமானம் ஏற்பட்டு, பின் 23.07.1996 செல்ரசீது ஆவண எண்.1840/1996 மூலம் நீக்கறவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும், பிரதிவாதி சகோதரருக்கும் எந்தவிதமான பரிவர்த்தனைகள் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் பைனானஸ் தொழிலும், ரியல்எஸ்டேட் தொழிலும் செய்து வந்தார், நான் இல்லத்தரசியாக இருந்து வந்ததால் எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.1 ஆன அடமானக்கடன் பத்திரத்தில் சொத்துவிபரத்தில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் காம்ப்ளக்ஸ்-ஐ ஈடுகடனாக வைத்து தான் பத்திரம் பதியப்பட்டது. வா.சா.ஆ.1 ல் சொத்தில் பிரதிவாதி பாகமதிப்பு ரூ.90,00,000/- என காட்டப்பட்டுள்ளது என்றால் அவரும், அவரது சகோதரரும் சேர்ந்து தான் கடன் வாங்கினார்கள். வா.சா.ஆ.1-ல் பிரதிவாதியின் சகோதரர் எழுதிக் கொடுத்ததாக எந்த கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆன அடமானக்கடன் பத்திரத்தின் அசல்

எப்பொழுதும் என்வசம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆன செல்ரசீதில் நானும், எனது கணவரும் கையொப்பம் செய்துள்ளோம், பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆன செல்ரசீதில் உள்ள வாசகங்கள் நானோ, எனது கணவரோ சொல்லிய விபரங்களை வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் பிரதிவாதியும் கூட இருந்தார். வா.சா.ஆ.2 க்கான விபரங்களை சுப்பிரமணியன் தான் பத்திரஎழுத்தருக்கு சொல்லியுள்ளாரா என்றால் பிரதிவாதியும் அப்பொழுது அங்கு இருந்தார். ஆவண எழுத்தரிடம் வாசா.ஆ 2 க்கான வாசகங்களை எனது கணவர் தான் சொன்னார் என்றும், பிரதிவாதி அங்கு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவண எழுத்தர் தான் எனது கணவரின் அனைத்து பரிவர்த்தனை ஆவணங்களையும் தயார் செய்வார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உண்மையாகவே பிரதிவாதி வா.சா.ஆ.2 ஆவணம் பதியும் போது உடன் இருந்திருந்தால் அவரும் ஒரு தரப்பினராக கையொப்பம் செய்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆன செல்ரசீதின் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் தினகரனிடம் உள்ளது. வா.சா.ஆ.2 ஆன செல்ரசீதின் அசல் ஆவணம் தினகரனிடம் உள்ள போது, வா.சா.ஆ.1 ஆவணம் எங்களிடம் ஏன் இருக்கிறது என்றால் காசோலையை கொடுத்துவிட்டு அந்த ஆவணம் அவரிடம் தான் இருக்க வேண்டும். வா.சா.ஆ.2 ஆன செல்ரசீது 28.05.2018 ம் தேதி தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி பெயரிலும், அவரது சகோதரர் பெயரிலும் ஐந்தாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், மதுரையில் அசல் வழக்கு எண்.140/2018 ஆக வழக்கு எனது கணவர் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது கணவர் இறந்த பிறகு நான் உபயதரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சியாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு 29.05.2018 அன்று

கொடுக்கப்பட்டது என்று சொன்னால் ஞாபகமில்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,

மதுரை.